ஈடுதாரருக்கு கிரைய ஆவணம்

_____ம் _____மாதம் ___ம் தேதி, _____

_____ விலாசத்தில் வசிக்கும் திரு_____அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு._____ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) அவர்களுக்கு,

_____விலாசத்தில் வசிக்கும் திரு._____ அவர்களின் மகன் சுமார் ___ வயதுள்ள திரு._____ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) ஆகிய நான் அடியிற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் மனப்பூர்வமாய் சம்மதித்து எழுதிக் கொடுத்த காலிமனை சுத்த விக்கிரையப் பத்திரம் என்னவென்றால்,

இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள _____ மாவட்டம், _____ சொத்தானது நான் எனது சொந்த வருவாய் மற்றும் சேமிப்பைக்கொண்டு _____ தேதியிட்ட _____ சார்பதிவக 1 புத்தக ஆவண எண்._____/___ மூலம் கிரையம் பெற்று அதுமுதல் எந்தவிதமான வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல் சர்க்கார் வரி வகையறாக்கள் செலுத்திக்கொண்டு என்னுடய சொந்த அனுபவத்திலும் சுவாதீனத்திலும் சகல சர்வ சுதந்திர பாத்தியங்களுடனும் சகல உரிமைகளுடனும் ஆண்டு அனுபவித்து வருகையில், எனது அவசர குடும்ப செலவின் காரணமாக தங்களது பெயருக்கு ரூ._____க்கான ஒரு ஈடு ஆவணம் _____ தேதியில் எழுதிக் கொடுத்து அந்த ஈடு அடமான ஆவணம் _____ சார்பதிவகத்தில் 1 புத்தக ஆவண எண்._____/___ ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஈடு ஆவணத்தில் கண்ட ஷரத்துக்களின்படி நான் வட்டி விகிதத்தை தங்களுக்கு செலுத்தி வந்துள்ள நிலையில் அசல் தொகையான ரூ._____ஐ என்னால் செலுத்த இயலாத நிலைக்காரணமாக அடமானத் சொத்தினை தங்களுக்கு ரூ._____க்கு கிரையம் செய்ய முன்வந்த நிலையில்

Verified RedEstate™

தாங்களும் அதை ஏற்றுக்கொண்டபடியால் இந்த கிரைய ஆவணத்தை தங்கள் பெயருக்கு எழுதிக் கொடுக்கலானேன்.

இந்த கிரைய ஆவணத்திற்கு நாம் இருவரும் நிச்சயித்துக் கொண்ட தொகை ரூ._____ முழுவதும் கீழ்கண்ட வகையில் எனது பற்றாகியது.

1. அடியிற்கண்ட சொத்தைப் பொறுத்து தங்களுக்கு

நான் _____ தேதியில் ரூ._____க்கு

எழுதிக் கொடுத்துள்ள ஈடு கடன் பத்திரத்திற்கு

நேற்று வரை தங்களுக்கு நான் செலுத்த வேண்டிய

வட்டி மற்றும் அசல் தொகை இதன் மூலம்

செல்லான வகையில் தங்களுக்கு பற்றானது.

ரூ._____

2. இன்றைய தேதியில் நான் தங்களிடமிருந்து

ரொக்கமாக பெற்றுக் கொண்டது. ரூ._____

_____

ஆக கூடுதல் ரூ._____

_____

ஆக கிரையத் தொகை ரூ._____ முழுவதும் மேற்கண்ட விவரப்படி எனது பற்றாகிய நிலையில் இன்றே கீழே சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்ட சொத்தை தங்களுக்கு கிரையம் செய்து, சுவாதீனம் ஒப்படைத்து விட்டேன்.

Verified RealEstate™

இன்று முதற்கொண்டு தாங்கள் கீழே சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்ட சொத்தை கைப்பற்றி தங்கள் புத்திர பௌத்திர பாரம்பரியமாய் வித்தொத்தி தானாதி வினுமிய விக்கரையங்களுக்கு யோக்கியமாய் என்றென்றைக்கும் சுத்த கிரைய வாசக சரத்துப்படிக்கு சகல சர்வ சுதந்திர பாத்தியங்களுடனும், சகல உரிமைகளுடனும் ஆண்டு அனுபவித்துக் கொள்ள வேண்டியது.

கீழே சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்ட சொத்தின் மீது தங்கள் பெயருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட அடமானம் தவிர வேறு எந்தவிதமான அடமானமோ, பின்தொடர்ச்சியோ, சர்க்கார் வரிபாக்கியோ, உயில் தாவா, வாரிசு தாவா, மைனர் வழக்கு, கோர்ட்டு அட்டாச்மெண்ட்டு, செக்யூரிட்டி, கொலட்டிரல், குத்தகை, நில ஆர்ஜிதம், போன்ற எந்தவிதமான வில்லங்கமும் கிடையாது என்று இதன் மூலம் உறுதி கூறுகிறேன்.

அப்படி பின்னிட்டு கீழ்கண்ட சொத்தில் ஏதேனும் வில்லங்கம் இருப்பதாக தெரியவந்தால் அதை என்னுடைய சொந்த செலவாலும், பொறுப்பாலும், எனது இதர சொத்தாலும், தீர்த்துக் கொடுக்கவும், கிரையம் பொருத்து பிழைத்திருத்தல் ஆவணம் அல்லது வேறு துணை ஆவணங்கள் எழுத தேவையேற்படின் தங்களது செலவில் எழுதிதர சம்மதிக்கிறேன்.

கீழ்கண்ட சொத்திற்கான வரி வகையறாக்களை இன்று தேதிவரையில் பாக்கியில்லாமல் செலுத்திவிட்டேன். அப்படி ஏதேனும் என்னால் கட்ட வேண்டிய நிலுவை (பாக்கி) ஏற்பட்டால் அவற்றை எனது சொந்த செலவில் செலுத்திவிடுகிறேன்.

இன்று முதற்கொண்டு சொத்திற்கான பட்டாவை தங்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்துக்கொண்டு சர்க்கார் வரி வகையாறாக்களை தங்கள் பெயரில் செலுத்தி வரவேண்டியது.

Verified RealEstate

இந்த சொத்துக்கு ஆதரவாக என்னுடைய பெயரால் கிரையம் பெற்ற _____ நெம்பர் கிரையப் பத்திரம் மற்றும் இதர பதிவுருக்களை அசலில் தங்கள் வசம் கொடுத்துள்ளேன்.

தங்களுக்கு கிரையம் செய்யும் கீழே சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்ட சொத்தின் மீது இனிமேல் எனக்கோ, எனது பின்னிட்டு வரும் வாரிசுகளுக்கோ, எந்தவிதமான உரிமை, அக்கு பாத்தியம், பின்தொடர்ச்சி ஏதும் கிடையாது என்று இதன் மூலம் உறுதி கூறுகிறேன்.

சொத்து விவரம்

இந்தப்படிக்கு நாம் இருவரும் அடியிற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் மனப்பூர்வமாய் சம்மதித்து எழுதிக் கொள்ளும் சுத்த விக்கிரையப் பத்திரம்.

சாட்சிகள்

1.

2.

Verified RealEstate™